13.03.2026

O.S.No. 119/2023

PW2– சந்தணாச்சலம் – த/பெ சுப்பையா தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.03.2026.

குறுக்கு விசாரணை : ( 3ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன்.

2. நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க யாரேனும் வரச்சொன்னால் வருவேன் என்றால் சரிதான். இதுவரை 20 முறை நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல இது தான் முதல்சாட்சி.

3. 1ம் வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான்.

4. இந்த வழக்கில் எத்தனை வாதிகள், பிரதிவாதிகள் உள்ளனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. வழக்கில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன என்றால் 4 சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன.

6. சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் புல எண்.65/1, 65/3, 65/4, 65/5.

7. தபசில் சொத்துக்களின் பக்கத்தில் எனக்கு சொந்தமாக இடம் இல்லை என்றால் சரியல்ல.

8. சந்தணத்தேவர் மகன் வேலாயுதத்திற்கு மொத்தம் 4 மகன்கள் என்றால் சரிதான். வீரபுத்திரனுக்கு எத்தனை மகன்கள் என்றால் 1 மகன் மட்டும் உள்ளார்.

9. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என்பதைக் காட்டக்கூடிய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பட்டா மற்றும் ரசீதை பார்த்துள்ளேன்.

10. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதி கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நாளது வரை பிரதிவாதி பெயரில் தான் சொத்தின் பட்டா உள்ளது என்றால் சரியல்ல.

11. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்ததால் வாதிகள் பிரச்சனை செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

12. நான் வேலாயுதத்தின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரியல்ல சித்தப்பா.

13. 1ம் வாதி எனது மகன் முறை என்பதால் அவருக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
தென்காசி